# அம்மா நூலகம் - மாலைநேர காய்கறிமார்க்கெட் அமைச்சர் வைத்திலிங்கம் திறந்து வைத்தார்




அம்மா மாலை நேர காய்கறி மார்க்கெட்டை அமைச்சர் வைத்திலிங்கம் திறந்து வைத்த போது எடுத்த படம்.

தஞ்சை மாநகராட்சி பகுதியில் மாலைநேர காய்கறி மார்க்கெட் மற்றும் அம்மா நூலகத்தை அமைச்சர் வைத்திலிங்கம் திறந்து வைத்தார்.

காய்கறி மார்க்கெட்- நூலகம்

முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுக்கிணங்க தஞ்சை மாநகராட்சி சார்பில் வ.உ.சி. நகரில் புதிதாக அம்மா நூலகம் கட்டப்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் கட்டிடம் ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. ரூ.6 லட்சம் மதிப்பில் 9 கணினிகள், ஜெராக்ஸ் எந்திரம், கண்காணிப்பு கேமரா, இணையதள வசதி ஆகியவை உள்ளன. இந்த நூலகம் திறப்பு விழா நேற்று நடந்தது. இதே போல் தஞ்சை திலகர் திடல் அருகே மாநகராட்சி சார்பில் ரூ.31 லட்சம் செலவில் கட்டப்பட்ட அம்மா மாலைநேர காய்கறி மார்க்கெட் திறப்பு விழாவும் நேற்று நடந்தது.

இந்த விழாவிற்கு மாநகராட்சி ஆணையர் வரதராஜன் தலைமை தாங்கினார். மாநகராட்சி மேயர் சாவித்திரிகோபால் வரவேற்றார். பரசுராமன் எம்.பி., ரெங்கசாமி எம்.எல்.ஏ., துணைமேயர் மணிகண்டன், நகர்நல அலுவலர் வரதராஜன், வருவாய் அதிகாரி சுரேஷ்குமார், மேலாளர் கிளமெண்ட் அந்தோணிராஜ், உதவி நகர்நல அலுவலர் ராஜசேகரன்,

கணினி பிரிவு அதிகாரி சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் வைத்திலிங்கம்

இந்த விழாக்களில் அமைச்சர் வைத்திலிங்கம் கலந்து கொண்டு அம்மா நூலகம் மற்றும் காய்கறி மார்க்கெட்டையும் திறந்து வைத்தார். பின்னர் மார்க்கெட்டில் ரூ.8 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்பட்ட உயர்கோபுர மின் விளக்கையும் அமைச்சர் இயக்கி வைத்தார்.

இதில் அரசு வக்கீல் தங்கப்பன், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை.திருஞானம், பால்வள தலைவர் காந்தி, காவேரி சிறப்பங்காடி தலைவர் பண்டரிநாதன், நிக்கல்சன் கூட்டுறவு வங்கி தலைவர் அறிவுடைநம்பி, துணைத்தலைவர் புண்ணியமூர்த்தி, கவுன்சிலர்கள் சரவணன், கல்வி புரவலர்கள் கோபால், ரமேஷ், உதவி பொறியாளர்கள் ரமேஷ், அறச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.